ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 5.4 – ஊரெல்லாம்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமானுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness  śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 5.4 – ஊரெல்லாம்

‡ ஊர் எல்லாம் துஞ்சி ⋆
உலகெல்லாம் நள் இருளாய் ⋆
நீர் எல்லாம் தேறி ⋆
ஓர் நீள் இரவாய் நீண்டதால் ⋆
பார் எல்லாம் உண்ட ⋆
நம் பாம்பணையான் வாரானால் ⋆
ஆர் எல்லே ! வல் வினையேன் ⋆
ஆவி காப்பார் இனியே ‖ **5.4.1** ‖

ஆவி காப்பார் இனி யார் ⋆
ஆழ் கடல் மண் விண் மூடி ⋆
மா விகாரம் ஆய் ⋆
ஓர் வல் இரவாய் நீண்டதால் ⋆
காவி சேர் வண்ணன் ⋆
என் கண்ணனும் வாரானால் ⋆
பாவியேன் நெஞ்சமே ! ⋆
நீயும் பாங்கல்லையே ‖ **5.4.2** ‖

நீயும் பாங்கல்லை காண் ⋆
நெஞ்சமே ! நீள் இரவும் ⋆
ஓயும் பொழுதின்றி ⋆
ஊழியாய் நீண்டதால் ⋆
காயும் கடுஞ்சிலை ⋆

என் காகுத்தன் வாரானால் ⋆
மாயும் வகை அறியேன் ⋆
வல் வினையேன் பெண் பிறந்தே ‖ **5.4.3** ‖

பெண் பிறந்தார் எய்தும் ⋆
பெரும் துயர் காண்கிலேன் என்று ⋆
ஒண் சுடரோன் ⋆
வாராதொளித்தான் ⋆
இம்மண் அளந்த கண் பெரிய செவ்வாய் ⋆
எம் காரேறு வாரானால் ⋆
எண் பெரிய சிந்தை நோய் ⋆
தீர்ப்பாரார் என்னையே ‖ **5.4.4** ‖

ஆர் என்னை ஆராய்வார் ⋆
அன்னையரும் தோழியரும் ⋆
நீர் என்னே ! என்னாதே ⋆
நீள் இரவும் துஞ்சுவரால் ⋆
கார் அன்ன மேனி ⋆
நம் கண்ணனும் வாரானால் ⋆
பேர் என்னை மாயாதால் ⋆
வல் வினையேன் பின் நின்றே ‖ **5.4.5** ‖

பின் நின்ற காதல் நோய் ⋆
நெஞ்சம் பெரிதடுமால் ⋆
முன் நின்றிரா ஊழி ⋆
கண் புதைய மூடிற்றால் ⋆
மன் நின்ற சக்கரத்து ⋆
எம் மாயவனும் வாரானால் ⋆

இந்நின்ற நீள் ஆவி ⋆
காப்பார் ஆர் இவ்விடத்தே ‖ **5.4.6** ‖

காப்பார் ஆர் இவ்விடத்து ⋆
கங்கிருளின் நுண் துளியாய் ⋆
சேண் பாலதூழியாய்ச் ⋆
செல்கின்ற கங்குல் வாய்த் ⋆
தூப் பால வெண் சங்கு ⋆
சக்கரத்தன் தோன்றானால் ⋆
தீப் பால வல் வினையேன் ⋆
தெய்வங்காள் ! என் செய்கேனோ ‖ **5.4.7** ‖

தெய்வங்காள் ! என் செய்கேன் ⋆
ஓர் இரவேழ் ஊழியாய் ⋆
மெய் வந்து நின்று ⋆
எனதாவி மெலிவிக்கும் ⋆
கை வந்த சக்கரத்து ⋆
என் கண்ணனும் வாரானால் ⋆
தை வந்த தண் தென்றல் ⋆
வெஞ்சுடரில் தான் அடுமே ‖ **5.4.8** ‖

வெஞ்சுடரில் தான் அடுமால் ⋆
வீங்கிருளின் நுண் துளியாய் ⋆
அஞ்சுடர வெய்யோன் ⋆
அணி நெடும் தேர் தோன்றாதால் ⋆
செஞ்சுடர்த் தாமரைக் கண் ⋆
செல்வனும் வாரானால் ⋆

நெஞ்சிடர் தீர்ப்பார் இனியார் ⋆
நின்றுருகுகின்றேனே ! || **5.4.9** ||

நின்றுருகுகின்றேனே போல ⋆
நெடு வானம் ⋆
சென்றுருகி நுண் துளியாய்ச் ⋆
செல்கின்ற கங்குல் வாய் ⋆
அன்றொருகால் வையம் ⋆
அளந்த பிரான் வாரான் என்று ⋆
ஒன்றொருகால் சொல்லாது ⋆
உலகோ உறங்குமே || **5.4.10** ||

‡ உறங்குவான் போல் ⋆
யோகு செய்த பெருமானை ⋆
சிறந்த பொழில் சூழ் ⋆
குருகூர்ச் சடகோபன் சொல் ⋆
நிறம் கிளர்ந்த அந்தாதி ⋆
ஆயிரத்திப்பத்தால் ⋆
இறந்து போய் வைகுந்தம் ⋆
சேரா ஆறெங்ஙனேயோ || **5.4.11** ||

அடிவரவு — ஊர் ஆவி நீயும் பெண் ஆர் பின் காப்பார் தெய்வங்காள் வெஞ்சுடரில் நின்றுருகி உறங்கு எங்ஙனேயோ

ஊரெல்லாம் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்